ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1987/23 - 2016 ඔක්තෝබර් මස 05 වැනි බදාදා - 2016.10.05

*1987/23 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்***

*4 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் 4ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், நீர்ப்பாசன முகாமைத்துவத்தில் ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்கும் என சர்வதேச நிறுவகம் ஒன்றைத் தாபிப்பதற்கென சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிருவாக ஆதரவுக் குழுவின் சார்பில் செயலாற்றும் போர்ட் மன்றத்திற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் 1983, செத்தெம்பர் 1 ஆந் திகதியன்று செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் நியதிகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமான அளவிற்கு (அந்த உடன்படிக்கையின் இயைபுள்ள உறுப்புரைகள், இதற்கான இங்குள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன) முன்னர் சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவகம் என அறியப்பட்டுள்ள சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவகத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*மங்கள சமரவீர, பா.உ.,*
*வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு*
*2016 செத்தெம்பர் 30.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***அட்டவணை***

*நீர்ப்பாசன முகாமைத்துவ ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமென சர்வதேச நிறுவகம் ஒன்றைத் தாபிப்பதற்கென சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவக ஆதரவுக் குழுவின் சார்பில் செயலாற்றும் போர்ட் மன்றத்திற்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக் குறிப்பு:*

7. ***உடன்படிக்கைகள்*** - *(அ) இலங்கை அரசாங்கமானது, சநீமு நிறுவகத்தை, இக்குறிப்பில் தரப்பட்டுள்ள குறிக்கோள் கொண்டதும் குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுமான ஒரு தன்னாட்சி உரிமைகொண்ட சர்வதேச, இலாபமீட்டாத ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி, ஒழுங்கமைப்பு என ஏற்றங்கீகரிக்கும் சநீமு நிறுவனத்தின் சர்வதேச அந்தஸ்தும் ஆளுமையும் அதன் பட்டயம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு, இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்படும்.*

*இலங்கை அரசாங்கமானது, சநீமு நிறுவகத்திற்குக் குறித்த சில வசதிகளை அளிக்கவும், இலங்கையிலுள்ள ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்திற்கு வழங்கப்பட்டவற்றிலும் வாய்ப்புக் குறைவானவையிராத பின்வருவன உள்ளிட்ட குறித்த சில சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும் வழங்குவதற்கும் உடன்படுகிறது :-*

(i) *சநீமு நிறுவகமும் அதன் ஆதனமும் நிதிகளும் சொத்துக்களும் அலுவலர்களும் இக்குறிப்புக்கான பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.*

***பின்னிணைப்பு***

**விடுபாட்டுரிமைகளும், சிறப்புரிமைகளும்**

***பாகம் I***

*நிறுவகத்தின் விடுபாட்டுரிமைகளும் சிறப்புரிமைகளும்*

1. *நிறுவகமானது, அதன் ஆதனமும் சொத்துக்களும் எங்காயினும் அமைந்திருப்பினும், அத்துடன் எவரினால் சொந்தமாக வைத்திருக்கப்படினும், ஏதேனும் குறிப்பிட்ட விடயத்தில் பணிப்பாளர் அதன் விடுபாட்டுரிமையை வெளிப்படையாகக் கைதுறந்திருக்கும் அளவுக்குத் தவிர, ஒவ்வொரு வகையான சட்டமன்றாணையிலிருந்தும் விடுபாட்டுரிமையை அனுபவித்தல் வேண்டும். எவ்வாறாயினும், விடுபாட்டுரிமையின் கைதுறத்தல் எதுவும் எந்தவகையான நிறைவேற்றுகை நடவடிக்கைக்கும் விசாலித்தல் ஆகாது.*

2. *நிறுவகத்தின் வளவுகள் முழுநிறைக் காப்புடையனவாக இருக்கும். நிறுவகத்தின் ஆதனமும் சொத்துக்களும் அவை எங்கு அமைந்திருப்பினுஞ்சரி, எத்தகையவரால் வைத்திருக்கப்படினுஞ்சரி, தேடுகையிடுதல், பறிமுதல் செய்தல், பறித்தெடுத்தல் என்பவற்றுக்கெதிராகவும், நிறைவேற்று, நிருவாக, நீதிமுறை அல்லது சட்ட நடவடிக்கைமூலமான வேறு ஏதேனும் வகையான தலையீட்டிற்கு எதிராகவும் விடுபாட்டுரிமை கொண்டனவாக இருத்தல் வேண்டும்.*

3. *நிறுவகத்தின் தொல்பொருட்களும், பொதுவில் அதற்குச் சொந்தமான அல்லது அதனால் வைத்திருக்கப்படும் அனைத்து ஆவணங்களும் அவை, எங்கு அமைந்திருப்பினுஞ்சரி, முழுநிறைக் காப்புடையனவாக இருத்தல் வேண்டும்.*

4. *நிதிக் கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகள் அல்லது ஏதேனும் வகையான கடன் தவணை உரிமைகள் மூலம் மட்டுப்படுத்தப்படாது-*

(அ) *நிறுவகமானது, நிதிகளை அல்லது ஏதேனும் வகையான நாணயத்தை வைத்திருக்கலாம் அத்துடன் ஏதேனும் நாணயத்திலான கணக்குகளைத் தொழிற்படுத்தலாம் ;*

(ஆ) *நிறுவகமானது இலங்கையிலிருந்து வேறு ஏதேனும் நாட்டிற்கும் அத்துடன் வேறு ஏதேனும் நாட்டிலிருந்து இலங்கைக்கும் அல்லது இலங்கைக்குள்ளும் அதன் நிதிகளை அல்லது நாணயத்தை இடமாற்றுவதற்கும், அதனால் வைத்திருக்கப்படும் ஏதேனும் நாணயத்தை வேறு ஏதேனும் நாணயமாக மாற்றுவதற்கும் சுதந்திரமுடையதாதல் வேண்டும். ஆயின் இலங்கையில் கொள்ளப்பட்ட நிதிகளை அல்லது நாணயத்தை அல்லது இலங்கை ரூபா நிதிகளை அல்லது நாணயத்தை இடமாற்றுதலும், மாற்றுதலும் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்ததாகவிருக்கும்.*

5. நிறுவகமும், அதன் சொத்துக்கள், வருமானம் மற்றும் ஏனைய ஆதனங்களும் பின்வருவனவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும்.-

(அ) அனைத்து நேரடி வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், பகிரங்க பயன்பாட்டுச் சேவைகளுக்காக விதிப்பனவுகளாகவுள்ள வீதவரிகள் மற்றும் வரிகளிலிருந்து நிறுவகம் விலக்களிப்பு கோரமுடியாது ;

(ஆ) அலுவலகப் பயன்பாட்டுக்காக நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்படும் அல்லது ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான சுங்கத்தீர்வைகள், வரிகள் மற்றும் தடைவிதிப்புகள், மட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய விலக்களிப்புகளின்கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், மீள் ஏற்றுமதி செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், இலங்கை அரசாங்கத்தின் முன் அனுமதியுடன் தவிர, இலங்கைக்குள் விற்பனை செய்யப்படுதல் ஆகாது. இலங்கைக்குள் விற்பனை செய்யப்பட்டால், அத்தகைய பொருட்கள் வழமையான தீர்வைகளுகக்கும் வரிகளுக்கும் அமைந்தனவாக இருக்கும் ;

(இ) அதன் வெளியீடுகள் தொடர்பில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான சுங்கத்தீர்வைகள், வரிகள் மற்றும் தடைவிதிப்புகள், மட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(6) நிறுவகமானது, அதன் உத்தியோகபூர்வ கடிதப் போக்குவரத்துகள் தொடர்பாக தபால், கேபிள்செய்திகள், தந்திகள், வானொலித்தந்திகள், தொலைபேசி மற்றும் ஏனைய செய்தித் தொடர்புகள் என்பவற்றிற்கு அளிக்கப்படும் முன்னுரிமைகள் வீதவரிகள் மற்றும் வரிகள் தொடர்பிலும் செய்தித்தாள்களுக்கும், வானொலிகளுக்கும், தொலைகாட்சிக்கும், தகவல் செய்தித்தாள்களுக்கும், தகவல் செய்திகள் கொடுப்பதற்கான செய்தி அறிக்கை வீதங்கள் தொடர்பிலும், இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுவதிலும் பார்க்க வாய்ப்புக் குறைவானவையாயிராத நடாத்துமுறையை அனுபவித்தல் வேண்டும். நிறுவகத்தின் உத்தியோகபூர்வ கடிதப் போக்குவரத்து மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ செய்திப் போக்குவரத்துமீது எவ்வித தணிக்கையும் பிரயோகிக்கப்படுதல் ஆகாது.

(7) நிறுவகமானது, குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கும், அதன் கடிதத் தொடர்புகளை கூரியர் சேவை மூலம் அல்லது பைகள் மூலம் அனுப்புவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் உரிமையுடையதாதல் வேண்டும். இது, இலங்கையிலுள்ள ஐ. நா. அதி அலுவலகத்திற்கு வழங்கப்படும் அதே விடுபாட்டுரிமைகளையும், சிறப்புரிமைகளையும் கொண்டதாகவிருக்கும்.

(8) நிறுவகமானது, இலங்கையில் ஐ.நா. அதி அலுவலகத்திற்கும், அதன் ஆதனங்கள் நிதிகள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றுக்கும் வழங்கப்படும் அத்தகைய வேறு சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும் துய்த்தல் வேண்டும்.

### பாகம் II

நிறுவகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் விடுபாட்டுரிமைகளும் சிறப்புரிமைகளும்

நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி இராஜதந்திரத் தூதுக்குழுவொன்றின் தலைவருக்கு வழங்கப்படும் அதே அந்தஸ்தையும் சிறப்புரிமையையும், வதிவுப் பிரதிநிதிக்கு வழங்கப்படும் அதே விடுபாட்டுரிமைகயையும் கொண்டிருத்தல் வேண்டும்.

### பாகம் III

நிறுவக உத்தியோகத்தர்களின் விடுபாட்டுரிமைகளும், சிறப்புரிமைகளும்

1. இப்பாகம் நிறுவகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு ஏற்புடையதாகும். நிறுவகத்திற்காகத் தூதுச் சேவைகளை நிறைவேற்றும் நிபுணர்கள், அவர்களது தூதுச் சேவைக் காலப்பகுதியின்போது அவர்களது பணிகளைச் சுதந்திரமாகப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறாக, இப்பாகத்தின் கீழான அத்தகைய சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் அவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) முதல் (5) வரையிலான வாசகங்கள் இலங்கைப் பிரசைகளுக்கும், இலங்கையில் நிரந்தரமாக வதிபவர்களுக்கும் ஏற்புடையனவாகா.

(1) அவர்கள் தமது உத்தியோகபூர்வ தன்மையின் பேசும் அல்லது எழுதும் சொற்கள் மற்றும் புரியும் செயல்கள் தொடர்பில் ஒவ்வொரு வகையிலுமான சட்ட மன்றாணையிலிருந்து விடுபாட்டுரிமை.

(2) நிறுவகத்ததினால் அவர்களுக்குச் செலுத்தப்படும் சம்பளங்களும், வேதனாதிகளும் மீதான வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்புகள்.

(3) அவர்களுக்கும், அவர்களது வாழ்க்கைத்துணைகள் மற்றும் தங்கிவாழும் உறவினர்களுக்கும், குடிவரவு, குடியகல்வு மட்டுப்பாடுகள், வெளிநாட்டவர் பதிவுத் தேவைப்பாடுகள் தேசிய சேவைக் கடப்பாடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிப்புகள்.

(4) இலங்கையிலுள்ள ஐ.நா. அதி அலுவலகத்தில் ஒப்பீட்டளவில் ஒத்த பதவித் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படும் நாணயமாற்று வசதிகள் தொடர்பிலான அதே சிறப்புரிமைகள்.

(5) தமது வாழ்க்கைத்துணைகள் மற்றும் தமது குடும்பங்களிற் தங்கிவாழ் உறுப்பினர்கள் ஆகியோருடன் சேர்ந்த சர்வதேச நெருக்கடி நிலைமைகளில் இலங்கையில் உள்ள ஐ.நா. அதி அலுவலக பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவனபோன்ற அதே நாடுகடத்தல் வசதிகள் வழங்கப்பெறுவதற்கான உரிமம்.

(6) இலங்கையிலுள்ள ஐ.நா.அதி அலுவலகத்தின் ஒப்பீட்டளவில் ஒத்த பதவித்தரத்தில் உள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும்.

பணிப்பாளர் தலைமையதிபதி, காலத்திற்குக்காலம், இப்பாகம் ஏற்புடையனவாகும் ஆட்களின் பெயர்களை இலங்கை அரசாங்கத்திற்கு அறிவிக்கச் செய்தல் வேண்டும்.

## பாகம் IV

சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் விட்டுவிடுதல்

நிறுவகத்தின், பணிப்பாளர் தலைமையதிபதிக்கும், நிறுவக அலுவலருக்கும், நிறுவகத்திற்காகத் தூதுச் சேவைகளை நிறைவேற்றும் நிபுணர்களுக்கும் வழங்கப்படும் சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும் நிறுவகத்தின் நலன்கருதி வழங்கப்பட்டுள்ளனவே அன்றித் தனிப்பட்ட ஆட்களின் தனிப்பட்ட நலன்கருதி அல்ல. விடுபாட்டுரிமையானது, நீதிநெறிமுறையைத் தடைப்படுத்தக் கூடியதாகவும், நிறுவகத்தின் நலன்களுக்குப் பங்கமில்லாமல் அதனை விட்டுவிடக்கூடியதாகவும் இருக்கும் விடயங்களில் நிறுவகத்தின் ஆளும் குழுவும், பணிப்பாளர் தலைமையதிபதியும் நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும், அதன் விடயங்களில் நிறுவகத்தின் ஆளும் குழுவும், பணிப்பாளர் தலைமையதிபதியும் நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் அதன் பணியாட்டொகுதியினதும் சார்பிலான அத்தகைய விடுபாட்டுரிமையை விட்டுவிடுவதற்கு உரிமையும், கடமையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

## பாகம் V

சுங்கத்தீர்வைகள், இறக்குமதித்தீர்வைகள் மற்றும் வரிகள் தொடர்பில் சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும்

இப்பாகமானது, தமது கடமைகளையும் பணிகளையும் புரியும் நோக்கத்திற்காக ஆறுமாத அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கும் (இலங்கையில் வதிபவர்களாக இருக்கும் நிருவாகத்தின் வெளிநாட்டு அலுவலர்களுக்கும்) இலங்கைப் பிரசைகளும், நிரந்தர வதிவுள்ளவர்களும் சர்வதேச ரீதியாக வேலைக்குத் திரட்டப்பட்டிருந்தால் அவர்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும்.

இப்பாகம் ஏற்புடைத்தாகும் ஆட்கள் தீர்வைகளோ, வரிகளோ இன்றியும், பிணைப்பொறுப்பு அளிக்காமலும் பின்வருவனவற்றை இறக்குமதி செய்ய உரிமையுடையவாதல் வேண்டும் :-

1. இலங்கையிலுள்ள ஐ.நா. அதி திட்டத்தில் ஒப்பீட்டளவில் ஒத்த பதவித்தரத்திலுள்ள ஆட்களுக்கு வழங்கப்படும் அதே அடிப்படையில், தமதும் தம்மில் தங்கியுள்ள குடும்ப உறுப்பினர்களதும் ஒரு மோட்டார் வாகனத்தையும், வரையறுக்கப்பட்ட அளவினதான தளபாட மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்களையும் இறக்குமதி செய்யலாம். அத்தகைய பொருட்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) ஒவ்வொரு வீட்டுமனைக்கும், ஒரு மோட்டார் வாகனம், ஒரு குளிர்சாதனப்பெட்டி, ஒரு டீப் பிரீஸர், ஒரு குக்கர், ஒரு துணி கழுவும் இயந்திரம், ஒரு ரெக்கோர்ட் பிளேயர், ஒரு டேப் ரெக்கோர்டர், ஒரு தொலைக்காட்சிப் பெட்டி, ஒரு வீடியோ ரெக்கோர்டர், சிறிய மின்சார உபகரணங்கள் ; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு ஆளுக்கும் ஒரு குளிரூட்டி, ஒரு புகைப்படக் கருவியும், சினிமாக் கருவியும், ஒரு ரேடியோ/கசெற் ரெக்கோடர்

அத்தகைய மோட்டார் வாகனம் அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டால் வழமையாக மீள ஏற்றுமதி செய்யப்படுதல் வேண்டுமேயொழிய, இலங்கை அரசாங்கத்தின் முன் அனுமதியுடன் அன்றி இலங்கைக்குள், விற்பனை செய்யப்படுதல் ஆகாது. இப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் இலங்கைக்குள் விற்பனைசெய்யப்பட்டால் அவை வழமையான தீர்வைகளும், வரிகளும் செலுத்தப்பட வேண்டியனவாக இருக்கும்.

2. மணமாகி, குடும்பத்துடன் இருந்தால், காலாண்டுக்கு எப்ஓபீ மீது 6,000 ரூபா பெறுமதிகொண்ட அல்லது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக மணமாகாமல் அல்லது மணமாகிக் குடும்பத்துடன் இல்லாமல் இருந்தால், காலாண்டுக்கு எப்ஓபீ மீது 3,900 ரூபா பெறுமதிகொண்ட உணவுப்பொருள்வகைகள், மதுபானம், சிகரெட்டுக்கள் மற்றும் நாளாந்த பாவனைப் பொருட்கள் வழங்கப்படும்.

3. தனிப்பட்ட அல்லது குடும்பப் பயன்பாட்டிற்காக வரையறுக்கப்பட்ட அளவிலான வீட்டுப் பாவனைப் பொருட்கள் மாற்றீடு செய்வதற்கான அத்துடன் மேலதிகமாக இறக்குமதி செய்வதற்கான வேண்டுகோள்களை, பொருத்தமானவிடத்தும் ஒவ்வொரு விடயத்தின் அடிப்படையிலும் இயைபான இலங்கை அதிகாரிகள் உரியவாறு சீர்தூக்கிப்பார்ப்பர்.

10- 712/1

---

**1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்**

4ஆம் பிரிவின் கீழான கட்டளை

1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 1990 மாச்சு 20 ஆம் திகதியன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் நியதிகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமான அளவுக்கு (அந்த உடன்படிக்கையின் இயைபான உறுப்புரைகள் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளன) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென, இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

மங்கள சமரவீர, பா.உ.,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, செத்தெம்பர் 30

**அட்டவணை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திற்கும் இடையிலான உடன்படிக்கை

**உறுப்புரை IX**

சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும்

1. அரசாங்கமானது, ஐக்கிய நாடுகளுக்கும், ஐ.நா.அதி மற்றும் ஐ.நா. அதி நிறைவேற்று முகவராண்மைகளாகச் செயலாற்றும் ஐ.நா. துணைநிலை உறுப்புக்குழுக்கள் உள்ளிட்ட அதன் உறுப்புக்குழுக்களுக்கும், அவற்றின் ஆதனத்திற்கும், நிதிகளுக்கும், சொத்துக்களுக்கும் மற்றும் நாட்டிலுள்ள ஐ.நா. அதி தூதுக் குழுவின் வதிவுப் பிரதிநிதிகளும், ஏனைய உறுப்பினர்களும் உள்ளிட்ட அவற்றின் அலுவலருக்கும் ஐக்கிய நாடுகளின் சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் பற்றிய சமவாயத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாகச் செய்யும்.

2. அரசாங்கமானது, நிறைவேற்று முகவராண்மையொன்றாகச் செயலாற்றும் விசேட முகவராண்மை ஒவ்வொன்றுக்கும், அதன் ஆதனத்திற்கும், நிதிகளுக்கும், சொத்துக்களுக்கும், அலுவலருக்கும் விசேட முகவராண்மைகளின் சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும் பற்றிய சமவாயத்தின் ஏற்பாடுகளை, அத்தகைய விசேட முகவராண்மைக்கு ஏற்புடைத்தான சமவாயத்திற்கான பின்னிணைப்பு உட்பட, ஏற்புடையனவாகச் செய்யும். சர்வதேச அணுசக்தி முகவராண்மை (சஅசமு) நிறைவேற்று முகவராண்மையொன்றாகச் செயலாற்றும் விடயத்தில், அரசாங்கமானது, அதன் ஆதனத்திற்கும், நிதிகளுக்கும், சொத்துக்களுக்கும் மற்றும் அதன் அலுவலருக்கும், நிபுணர்களுக்கும், சஅச முகவராண்மையின் சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் பற்றிய உடன்படிக்கையினை ஏற்புடைத்தாகச் செய்யும்.

3. தூதுக்குழுவானது, பரஸ்பரம் இணங்கிக் கொள்ளப்பட்டவாறு அதன் பணிகளைப் பயனுறுவகையில் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய மேலதிக சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் நாட்டிலுள்ள ஐ.நா.அதி தூதுக்குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

4. (அ) குறிப்பிட்ட கருத்திட்டங்கள் தொடர்பிலான கருத்திட்ட ஆவணங்களில் திறத்தவர்கள் வேறுவகையாக உடன்பட்டுக் கொண்டுள்ளவாறு தவிர, அரசாங்கமானது, மேற்கூறிய 1ஆம் 2ஆம் பந்திகளினால் மேவப்படாதவர்களும், ஐ.நா. அதி விசேட முகவராண்மை அல்லது சஅசமு என்பவற்றின் சார்பில் சேவையாற்றுகின்றவர்களுமான, உள்ளூரில் தொழிலுக்கமர்த்தப்பட்ட இலங்கைப் பிரசைகள் அல்லாத எல்லா ஆட்களுக்கும், ஐக்கிய நாடுகளின் அல்லது விசேட முகவராண்மைகளின் சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் பற்றிய சமவாயத்தின் அல்லது சஅசச முகவராண்மைகளின் சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் பற்றிய சமவாயத்தின் அல்லது சஅச முகவராண்மையின் சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் பற்றிய உடன்படிக்கையின் முறையே 18ஆம் 19ஆம் அல்லது 18ஆம் பிரிவுகளின் கீழ் ஐக்கிய நாடுகளின், சம்பந்தப்பட்ட விசேட முகவராண்மைகளின் அல்லது சஅச முகவராண்மைகளின் அலுவலருக்கும் வழங்கப்படும் அதே சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் வழங்குதல் வேண்டும் ;

(ஆ) இவ்வுறுப்புரையின் முற்போந்த பகுதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும் பற்றிய சாதனங்களின் நோக்கத்திற்காக-

(1) மேற்கூறிய உட்பந்தி 4 (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள கருத்திட்டம் தொடர்பிலான அனைத்துப் பத்திரங்களும், ஆவணங்களும் விடயத்திற்கேற்ப, ஐக்கியநாடுகளுக்கு, சம்பந்தப்பட்ட விசேட முகவராண்மைகளுக்கு அல்லது சஅச முகவராண்மைக்குச் சொந்தமான ஆவணங்கள் எனக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன்

(2) கருத்திட்டம் ஒன்றின் நோக்கங்களுக்காக, அந்த ஆட்களினால் நாட்டுக்குள் கொணரப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட உபகரணங்களும், பொருட்களும், வழங்கல்களும் விடயத்திற்கேற்ப, ஐக்கிய நாடுகளின், சம்பந்தப்பட்ட விசேட முகவராண்மையின் அல்லது சஅச முகவராண்மையின் ஆதனம் எனக் கருதப்படுதல் வேண்டும்.

5. இந்த உடன்படிக்கையின் ix ஆம், x ஆம், xii ஆம், உறுப்புரைகளில் பயன்படுத்தப்பட்டவாறு, 'சேவையாற்றும் ஆட்கள்' என்னும் சொல்லமைப்பு, வலிந்துதவுநர்கள் , உசாத்துணையாளர்கள் , சட்ட ஆளுமைபெற்ற ஆட்கள் அத்துடன் இயற்கை ஆட்கள் அவர்களது ஊழியர்கள் என்போரை உள்ளடக்கும் ஒரு கருத்திட்டத்திற்கான ஐ.நா. அதி உதவியை நிறைவேற்றுவதற்காக அல்லது நிறைவேற்றுவதில் உதவுவதற்காக நிறைவேற்று முகவராண்மை ஒன்று என்ற வகையிலோ ஐ.நா. அதி வைத்திருக்கக் கூடிய அரசாங்க ஸ்தாபனங்களையும் அல்லது குழுமங்களையும் அவற்றின் ஊழியர்களையும் இது உள்ளடக்கும். வேறு ஏதேனும் சாதனத்தில்அத்தகைய ஸ்தாபனங்களுக்கு அல்லது குழுமங்களுக்கு அல்லது அவற்றின் ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்புரிமைகளை, விடுபாட்டுரிமைகளை அல்லது வசதிகளை இந்த உடன்படிக்கையில் உள்ள எதுவும் வரையறுப்பதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

**1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்**

*4 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 1987 ஒற்றோபர் 1 ஆம் திகதியன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் நியதிகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமான அளவுக்கு, (அந்த உடன்படிக்கையின் இயைபான உறுப்புரைகள் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளன) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென, இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*மங்கள சமரவீர, பா.உ.,*
*வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2016, செத்தெம்பர் 30*

**அட்டவணை**

*அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகருக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையிலான 1987 ஒற்றோபர் 1ஆம் தேதிய கடிதப் பரிமாற்றங்களின் 1ஆம் 5ஆம் 6ஆம் பந்திகள்*

4. மேற்கூறிய 3 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தூதுச் சேவையை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அ.ஐ.நா.உ. ஸ்தானிகராலயமும் அதன் அலுவலர்களும் இலங்கையிலுள்ள ஐ.நா.அதி வதிவுப் பிரதிநிதி அலுவலகத்திற்கும் இலங்கையிலுள்ள ஐ.நா.அதி அலுவலகத்தின் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளவாறான, முதலாவதுஉள்வருகைச் சிறப்புரிமைகள் உள்ளிட்ட அதே நியாயாதிக்க வழிபாட்டுரிமைகளையும், வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பையும், நாணயமாற்றுவசதிகளையும், சுங்க வசதிகளையும் இலங்கைக்குள் துய்த்தல் வேண்டும். உள்நாட்டில் சேவைக்குத் திரட்டப்படும் இலங்கை நாட்டவருக்கு இப்பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.

5. இச்சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் அ.ஐ.நா.உ. ஸ்தானிகராலயத்தின் நன்மை கருதி வழங்கப்படுகின்றனவே அன்றித் தனிப்பட்டவர்களின் தனிப்பட்ட நலன்கருதி அல்ல. எனவே, அத்தகைய விடுபாட்டுரிமை நீதி நெறிமுறையைத் தடைப்படுத்தும் எனவும், அ.ஐ.நா.உ. ஸ்தானிகராலயத்தின் நலன்களுக்குப் பங்கமின்றி அதனை விட்டு விடலாம் எனவும் அ.ஐ.நா.உ. ஸ்தானிகராலயம் அபிப்பிராயப்படும் போதிலெல்லாம், அது எவரேனும் அலுவலர்களின் விடுபாட்டுரிமையை விட்டுவிடுதல் வேண்டும்.

6. இக்கடிதத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும், வசதிகளும் இக்கடிதத் தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக்கு செல்லுபடியுடையனவாகவிருத்தல் வேண்டும்.

*10- 712/3*

---

**1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்**

*4 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான் ,1996 பெப்புருவரி 20 ஆம் திகதியன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் குறிப்புகளின் நியதிகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமான அளவுக்கு, (அந்த உடன்படிக்கையின் இயைபான உறுப்புரைகள் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளன) கொழும்புத் திட்டப்பணியகம் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென, இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*மங்கள சமரவீர, பா.உ.,*
*வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2016, செத்தெம்பர் 30.*

**அட்டவணை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

**அரசாங்கத்திற்கும் கொழும்புத்திட்டப் பணியகத்துக்குமிடையேயான உடன்படிக்கைக் குறிப்பு**

*உறுப்புரை 1*

**பணியகத்தின் அந்தஸ்து**

1. (இதனகத்துப் பின்னர் "பணியகம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) கொழும்புத்திட்டப் பணியகம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புலத்தின் சட்ட ஆளுமையை அனுபவித்தல் வேண்டும். அத்துடன் சர்வதேச மற்றும் அரசாங்கத்துக்கிடையிலான நிறுவனங்களின் தூதுக் குழுக்களுக்கு வழங்கப்படுவதற்குச் சமமான அந்தஸ்தை அனுபவித்தலும் வேண்டும். ஒப்பந்தஞ் செய்வதற்கும் அசைவற்ற மற்றும் அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் விற்றுத்தீர்ப்பதற்கும் சட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கும் அதற்குப் பூரண தத்துவமுண்டு.

2. பணியகம் இந்த உடன்படிக்கையினால் வழங்கப்பட்ட சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும்.

3. பணியகமும் அதன் ஆதனமும், ஏதேனும் குறிப்பிட்ட விடயத்தில் பணிப்பாளர் அதன் விடுபாட்டுரிமையைக் கைதுறந்திருக்கும் அளவுக்குத் தவிர, சட்ட அல்லது நிருவாக நியாயாதிக்கத்திலிருந்து விடுபட்டதாக இருத்தல் வேண்டும்.

*உறுப்புரை 2*

**பணியகத்தின் விடுபாட்டுரிமைகளும் சிறப்புரிமைகளும்**

1. பணியகமானது அதன் ஆதனமும் சொத்துக்களும் எங்காயினும் அமைந்திருப்பினும், அத்துடன் எவரினால் சொந்தமாக வைத்திருக்கப்படினும், ஏதேனும் குறிப்பிட்ட விடயத்தில் பணிப்பாளர் அதன் விடுபாட்டுரிமையை வெளிப்படையாகக் கைதுறந்திருக்கும் அளவுக்குத் தவிர, ஒவ்வொரு வகையான சட்ட மன்றாணையிலிருந்தும் விடுபாட்டுரிமையை அனுபவித்தல் வேண்டும். எவ்வாறாயினும் விடுபாட்டுரிமையின் கைதுறத்தல் எதுவும் எந்த வகையான நிறைவேற்றுகை நடவடிக்கைக்கும் விசாலித்தல் ஆகாது.

2. பணியகத்தின் வளவுகள் முழுநிறைக் காப்புடையனவாக இருக்கும். பணியகத்தின் ஆதனமும், சொத்துக்களும் அவை எங்கு அமைந்திருப்பினுஞ்சரி, எத்தகையவரால் வைத்திருக்கப்படினுஞ்சரி, ஏதேனும் குறிப்பிட்ட விடயத்தில் பணிப்பாளர் விடுபாட்டுரிமையை வெளிப்படையாக கைதுறந்திருக்கின்ற அளவுக்குத் தவிர, தேடுகையிடுதல், தேவைக்கெடுத்தல், பறிமுதல் செய்தல், பறித்தெடுத்தல் என்பவற்றுக்கெதிராகவும், நிறைவேற்று, நிருவாக நீதிமுறை அல்லது சட்டநடவடிக்கை மூலமான வேறு ஏதேனும் வகையான தலையீட்டிற்கு எதிராகவும் விடுபாட்டுரிமை கொண்டனவாக இருத்தல் வேண்டும்.

3. பணியகத்தின் தொல்பொருட்களும், பொதுவில் அதற்குச் சொந்தமான அல்லது அதனால் வைத்திருக்கப்படும் அனைத்து ஆவணங்களும், அவை எங்கு அமைந்திருப்பினுஞ்சரி, முழு நிறைக் காப்புடையனவாக இருத்தல் வேண்டும்.

4. நிதிக் கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகள் அல்லது ஏதேனும் வகையான கடன் தவணை உரிமைகள் மூலம் மட்டுப்படுத்தப்படாது.-

   (அ) பணியகமானது நிதிகளை அல்லது ஏதேனும் வகையான நாணயத்தை வைத்திருக்கலாம் அத்துடன் ஏதேனும் நாணயத்திலான கணக்குகளைத் தொழிற்படுத்தலாம் ;

   (ஆ) பணியகமானது, இலங்கையிலிருந்து வேறு ஏதேனும் நாட்டிற்கும் அத்துடன் வேறு ஏதேனும் நாட்டிலிருந்து இலங்கைக்கும், அல்லது இலங்கைக்குள்ளும் அதன் நிதிகளை அல்லது நாணயத்தை இடம்மாற்றுவதற்கும், அதனால் வைத்திருக்கப்படும் ஏதேனும் நாணயத்தை வேறு ஏதேனும் நாணயமாக மாற்றுவதற்கும் சுதந்திரமுடையதாதல் வேண்டும். ஆயின், இலங்கையில் கொள்ளப்பட்ட நிதிகளை அல்லது நாணயத்தை அல்லது நாணயத்தை அல்லது இலங்கை ரூபா நிதிகளை அல்லது நாணயத்தை இடமாற்றுதலும், மாற்றுதலும் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்ததாகவிருக்கும்.

5. பணியகமும், அதன் சொத்துக்கள், வருமானம் மற்றும் ஏனைய ஆதனங்களும் பின்வருவனவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும் :-

(அ) அனைத்து நேரடி வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், பகிரங்க பயன்பாட்டுச் சேவைகளுக்கான விதிப்பனவுகளாகவுள்ள வீத வரிகள் மற்றும் வரிகளிலிருந்து பணியகம் விலக்களிப்பு கோரமுடியாது ;

(ஆ) அலுவலகப் பயன்பாட்டுக்காகப் பணியகத்தினால் இறக்குமதி செய்யப்படும் அல்லது ஏற்றுமதிசெய்யப்படும் பொருட்கள் தொடர்பில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான சுங்கத்தீர்வைகள், வரிகள் மற்றும் தடைவிதிப்புகள், மட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய விலக்களிப்புக்களின் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், மீள ஏற்றுமதி செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், இலங்கை அரசாங்கத்தின் முன் அனுமதியுடன் தவிர, இலங்கைக்குள் விற்பனை செய்யப்படுதலும் ஆகாது. இலங்கைக்குள் விற்பனை செய்யப்பட்டால், அத்தகைய பொருட்கள் வழமையான தீர்வைகளுக்கும், வரிகளுக்கும் அமைந்தனவாக இருக்கும்.

(இ) அதன் வெளியீடுகள் தொடர்பில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான சுங்கத்தீர்வைகள், வரிகள் மற்றும் தடைவிதிப்புக்கள், மட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

6. பணியகமானது, அதன் உத்தியோகபூர்வ கடிதப் போக்குவரத்துக்கள் தொடர்பாக தபால், கேபிள் செய்திகள், தந்திகள், வானொலித் தந்திகள், தொலைப்படப் பிரதிகள், தொலைபேசி மற்றும் ஏனைய செய்தித் தொடர்புகள் என்பவற்றிற்கு அளிக்கப்படும் முன்னுரிமை வீதவரிகள் மற்றும் வரிகள் தொடர்பிலும், செய்தித்தாள்களுக்கும், வானொலிகளுக்கும், தொலைக்காட்சிக்கும் தகவல் செய்திகள் கொடுப்பதற்கான செய்தி அறிக்கை வீதங்கள் தொடர்பிலும், இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட (ஐ.நா.அ.தி.) அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுவதிலும் பார்க்க வாய்ப்புக் குறைவானவையாயிராத நடாத்து முறையை அனுபவித்தல் வேண்டும். பணியகத்தின் உத்தியோகபூர்வ கடிதப் போக்குவரத்து, மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ செய்திப் போக்குவரத்து மீது எவ்வித தணிக்கையும் பிரயோகிக்கப்படுதல் ஆகாது.

7. பணியகமானது, குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கும், அதன் கடிதத் தொடர்புகளை கூரியர் சேவைமூலம் அல்லது பைகள் மூலம் அனுப்புவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் உரிமையுடையதாதல் வேண்டும். இது, இலங்கையிலுள்ள ஐ.நா. அ.தி. அலுவலகத்திற்கு வழங்கப்படும் அதே விடுபாட்டுரிமைகளையும், சிறப்புரிமைகளையும் கொண்டதாகவிருக்கும்.

8. பணியகமானது, இலங்கையில் ஐ.நா.அ.தி. அலுவலகத்திற்கும், அதன் ஆதனங்கள், நிதிகள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றுக்கும் வழங்கப்படும் அத்தகைய வேறு சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும் துய்த்தல் வேண்டும்.

*உறுப்புரை 3*

**பணிப்பாளரின் விடுபாட்டுரிமைகளும் சிறப்புரிமைகளும்**

பணியகத்தின் பணிப்பாளர், ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவுப் பிரதிநிதிக்கு வழங்கப்படும் அதே அந்தஸ்து, விடுபாட்டுரிமைகள், சிறப்புரிமைகள் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*உறுப்புரை 4*

**பணியக உத்தியோகத்தர்களின் விடுபாட்டுரிமைகளும், சிறப்புரிமைகளும்**

1. இப்பாகம் நிறுவகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு ஏற்புடையதாகும். பணியகத்திற்காகத் தூதுச் சேவைகளை நிறைவேற்றும் நிபுணர்கள், அவர்களது தூதுச் சேவைக் காலப்பகுதியின்போது அவர்களது பணிகளைச் சுதந்திரமாகப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறாக, இப்பாகத்தின் கீழான அத்தகைய சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் அவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(iii) முதல் (v) வரையிலான வாசகங்கள் இலங்கைப் பிரசைகளுக்கும், இலங்கையில் நிரந்தரமாக வதிபவர்களுக்கும் ஏற்புடையனவாகா ;

(i) அவர்கள் தமது உத்தியோகபூர்வ தன்மையின் பேசும் அல்லது எழுதும் சொற்கள் மற்றும் புரியும் செயல்கள் தொடர்பில் ஒவ்வொரு வகையிலான சட்ட மன்றாணையிலிருந்து விடுபாட்டுரிமை ;

(ii) பணியகத்ததினால் அவர்களுக்குச் செலுத்தப்படும் சம்பளங்களும், வேதனாதிகளும் மீதான வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்புகள் ;

(iii) அவர்களுக்கும், அவர்களது வாழ்க்கைத்துணைகள் மற்றும் தங்கிவாழும் உறவினர்களுக்கும், குடிவரவு, குடியகல்வு மட்டுப்பாடுகள், வெளிநாட்டவர் பதிவுத் தேவைப்பாடுகள் தேசிய சேவைக் கடப்பாடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிப்புகள் ;

(iv) இலங்கையிலுள்ள ஐ.நா. அ. தி அலுவலகத்தில் ஒப்பீட்டளவில் ஒத்த பதவித் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படும் நாணயமாற்று வசதிகள் தொடர்பிலான அதே சிறப்புரிமைகள் ;

(v) தமது வாழ்க்கைத்துணைகள் மற்றும் தமது குடும்பங்களில் தங்கிவாழ் உறுப்பினர்கள் ஆகியோருடன் சேர்ந்த சர்வதேச நெருக்கடி நிலைமைகளில் இலங்கையில் உள்ள ஐ.நா. அ. தி. அலுவலக பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவன போன்ற அதே நாடுகடத்தல் வசதிகள் வழங்கப்பெறுவதற்கான உரிமம் ;

(vi) இதற்கான பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளவாறாக சுங்கத்தீர்வைகள், இறக்குமதித்தீர்வைகள் மற்றும் வரிகள் தொடர்பில் சிறப்புரிமைகளும், வசதிகளும் ;

(vii) இலங்கையிலுள்ள ஐ.நா.அதி. அலுவலகத்தின் ஒப்பீட்டளவில் ஒத்த பதவித்தரத்தில் உள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும்.

2. பணிப்பாளர், காலத்திற்குக்காலம், இப்பாகம் ஏற்புடையனவாகும் ஆட்களின் பெயர்களை இலங்கை அரசாங்கத்திற்கு அறிவிக்கச் செய்தல் வேண்டும். இலங்கை அரசாங்கமும் பணிப்பாளரும் பணியகத்தினது பணியாட்டொகுதியின் அளவைத் தீர்மானிப்பதற்கென, காலத்திற்குக் காலம், ஒருவரையொருவர் கலந்தாலோசித்தல் வேண்டும்.

உறுப்புரை 5

**சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும் விட்டுவிடுதல்**

பணியகத்திற்கும், பணிப்பாளருக்கும், பணியக அலுவலருக்கும், பணியகத்திற்காகத் தூதுச் சேவைகளை நிறைவேற்றும் நிபுணர்களுக்கும் வழங்கப்படும் சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் பணியகத்தின் நலன்கருதி வழங்கப்பட்டுள்ளனவே அன்றித் தனிப்பட்ட ஆட்களின் தனிப்பட்ட நலன்கருதி அல்ல. விடுபாட்டுரிமையானது, நீதிநெறிமுறையையும், சட்ட ஒழுங்கு வலுவுக்கிடலையும் தடைப்படுத்தக் கூடியதாகவும், பணியகத்தின் நலன்களுக்குப் பங்கமில்லாமல் அதனை விட்டுவிடக்கூடியதாகவும் இருக்கும் விடயங்களில் பணியகத்தின் பணிப்பாளர், பணியகத்தினதும், அதன் பணியாட்டொகுதியினதும் சார்பிலான அத்தகைய விடுபாட்டுரிமையை விட்டுவிடுவதற்கு உரிமையும், கடமையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

உறுப்புரை 7

**ஒத்துழைப்பு நடவடிக்கைகள்**

1. முறையான நீதி நிருவாகத்தை வசதிப்படுத்துவதற்கும், சட்டங்களும், ஒழுங்குவிதிகளும், குறிப்பாகத் தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட சட்டங்களும், ஒழுங்கு விதிகளும் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், பணியகத்திற்கும் அதன் அலுவலருக்கும் வழங்கப்பட்ட சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும், வசதிகளும் தொடர்பில் ஏதேனும் துஷ்ப்பிரயோகங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கும் என இலங்கை அரசாங்கத்தின் தோதான அதிகாரிகளுடன் எல்லா நேரங்களிலும் பணிப்பாளர் ஒத்துழைத்தல் வேண்டும்.

2. பணியக அலுவலகங்கள் அதன் அலுவலகப் பணிகள் பிரயோகிக்கப்படுவதற்கு இசைவாயில்லாத எவ்விதத்திலும் பயன்படுத்தல் ஆகாது.

இணைப்பு

**சுங்க இறக்குமதித்தீர்வைகள் மற்றும் வரிகள் சம்பந்தப்பட்ட சிறப்புரிமைகள் மற்றும் உரிமைகள்**

பணியகத்தின் வெளிநாட்டு உத்தியோகத்தர்களுக்கு இப்பகுதி செல்லுபடியாவதுடன் இலங்கைப் பிரசைகள் இலங்கையில் நிரந்தர வதிவிடம் உடையோர் சர்வதேச ரீதியாக பணிக்கமர்த்தப்பட்டு இலங்கையில் தங்களது கடமைகள் காரணமாக ஆறு மாதங்கள் அல்லது அதற்குக் கூடுதலான காலம் வசிப்பவர்கள் அல்லாதோருக்கு செல்லுபடியாகாது.

இப்பகுதியில் குறிப்பிடப்பட்டவர்கள் சுங்கத்தீர்வை வரிகள் தவிர்ந்த மற்றும் பிணைகள் அற்ற இறக்குமதிக்கு உரித்துடையராவர்.

1. இலங்கையிலுள்ள ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அலுவலகத்தில் இதே மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டவாறு இலங்கையில் தங்களது பொறுப்புக்களைக் கையேற்ற ஆறு மாத காலத்துக்குள் அவர்களது மற்றும் குடும்பத்தவர்களது பாவனைக்கென, ஒரு மோட்டார் வாகனம் குறிப்பிட்ட அளவு தளபாடங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்.

அவை பின்வரும் பொருட்களாகும் :-

(அ) ஒவ்வொரு வீட்டுக்கும், ஒரு மோட்டார் வாகனம், ஒரு குளிர்சாதனப்பெட்டி, ஒரு டீப் பிரீஸர், ஒரு குக்கர், ஒரு சலவை இயந்திரம், பாத்திரங்கள் கழுவும் இயந்திரம், ஒரு வானொலிப் பெட்டி, ஒரு ரெக்கோர்ட் பிளேயர், ஒரு டேப் ரெக்கோர்டர், ஒரு தொலைக்காட்சிப் பெட்டி, ஒரு வீடியோ ரெக்கோர்டர், மற்றும் சிறிய மின்சார உபகரணங்கள் ;

(ஆ) ஒவ்வொரு நபருக்கும் ஒரு குளிரூட்டி, ஒரு செட் புகைப்படக் கருவிகளும், சினிமாக் கருவிகளும் மற்றும் ஒரு ரேடியோ கசெற் ரெக்கோடரும் :

அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை வழமைபோல் திருப்பி ஏற்றுமதி செய்யலாம். அரசாங்கத்தின் அனுமதியின்றி இலங்கையில் விற்பனை செய்யலாகாது. அவ்வாறு விற்பனை செய்யும் பட்சத்தில் இப்பந்தியில் குறிப்பிட்டுள்ள பொருட்களுக்கு வழமையான சுங்கத்தீர்வைகளும், வரிகளும் அறவிடப்படும்.

2. விவாகமாகி, குடும்பத்துடன் வசிப்பவர் சொந்தப் பாவனைக்கும் அன்றாட பாவனைக்குமென மாதமொன்றிற்கு கப்பலில் ஏற்றும் வரை இலவசமான அமெரிக்க டொலர் 250 பெறுமதி வாய்ந்த உணவுப்பொருட்கள், மதுபான வகை, சிகரெட் மற்றும் பாவனைப் பொருட்கள் விவாகமாகாத அல்லது விவாகமான குடும்பத்துடன் வசிக்காதவர்கள் கப்பலில் ஏற்றும்வரை இலவசமான அமெரிக்க டொலர் 175 பெறுமதியான பொருட்கள்.

3. குடும்ப உத்தியோகத்துக்கான அல்லது சொந்தப்பாவனைக்கான பொருட்களின் மட்டுப்படுத்தப்பட்ட தொகையின் இறக்குமதி அல்லது அதற்குப் பதிலான இறக்குமதிகளுக்கும் அனுமதி கோரப்பட்டால் சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான வகையில் உரிய கவனம் செலுத்துவார்கள்.

10- 712/4

---

**1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்**

4ஆம் பிரிவின் கீழான கட்டளை

1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 1988, மாச்சு 21 ஆம் திகதியன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் நியதிகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமான அளவுக்கு, (அந்த உடன்படிக்கையின் இயைபான உறுப்புரைகள் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளன) சர்வதேச தொழில் ஒழுங்கமைப்பு தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென, இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

மங்கள சமரவீர பா.உ.,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016 செத்தெம்பர் 30.

**அட்டவணை**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும், சர்வதேச தொழில் ஒழுங்கமைப்புக்கும் இடையில், கொழும்பில் ஒழுங்கமைப்பின் அலுவலகம் ஒன்றைத் தாபிப்பது சம்பந்தமாகச் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை**

*உறுப்புரை II*

1. சர்வதேச தொழில் ஒழுங்கமைப்பு சம்பந்தமாக, சிறப்பு முகவராண்மைகளின் சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும் பற்றிய 1947, நவெம்பர் 21 ஆம் தேதிய, சமவாயத்திலும், 1948, யூலை 10ஆம் தேதிய அதன் பின்னிணைப்பிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும், கொழும்பிலுள்ள சர்வதேச தொழில் ஒழுங்கமைப்பு அலுவலகத்திற்கும் அத்தகைய அலுவலகத்தின் பணியாட்டொகுதியினர்க்கும், அத்துடன் சமவாயத்தில் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட அதன் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் ஆட்கள் உத்தியோகபூர்வ விடயங்களுக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் போகும்போதிலெல்லாம் அவர்களுக்கும் அரசாங்கம் வழங்கும்.

2. கொழும்பில் உள்ள சர்வதேச ஒழுங்கமைப்பு அலுவலகத்திற்கும் மேற்கூறிய 1ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆட்களுக்கும், அரசாங்கமானது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உள்ள அரசாங்கங்களுக்குமிடையிலான வேறு ஏதேனும் ஒழுங்கமைப்புக்கும் அதன் பணியாட்டொகுதியினருக்கும் வழங்கப்பட்டவற்றிலும் பார்க்க வாய்ப்புக் குறைவானவையாக இராத சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும் வழங்கும்.

---

*10- 712/5*

**1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்**

*4ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 1990, யூன் 16 ஆம் திகதியன்றும் 2016, ஒகத்து 18 ஆந் திகதியன்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் நியதிகளுக்கு அவசியமான அளவிற்கு மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் 1990, யூன் 16 ஆந் திகதியன்றும் 2016 ஒகத்து 18 ஆந் திகதியன்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உடன்படிக்கையின் இயைபுள்ள உறுப்புரைகள் இலங்கையிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் அதன் பேராளர் குழுவிற்கும் பாதிப்பின்மைகளையும் சிறப்புரிமைகளையும் வசதிகளையும் வழங்குதல் தொடர்பிலான அந்தஸ்து உடன்படிக்கையினதும் அந்தஸ்து உடன்படிக்கையின் பிற்சேர்க்கைகளும் பயன்கொடுப்பதற்கு அவசியமான அளவிற்கு மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

மங்கள சமரவீர பா.உ.,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2016, செத்தெம்பர் 30.*

**அட்டவணை**

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் அதன் பேராளர் குழுவுக்கும் இலங்கையில் விடுபாட்டுரிமைகளையும் சிறப்புரிமைகளையும் வசதிகளையும் வழங்குதல் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (இலங்கை அரசாங்கத்துக்கும்) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் (ச.செ.ச.) இடையிலான அந்தஸ்து உடன்படிக்கை**

*உறுப்புரை 1*

**பேராளர் குழுவின் அந்தஸ்து**

1. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் அதன் பேராளர் குழுவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புலத்தில் சட்ட ஆளுமையைத் துய்த்தல் வேண்டும் என்பதுடன் சர்வதேச மற்றும் அரசாங்கத்துக்கிடையிலான நிறுவனங்களின் தூதுக்குழுக்களுக்கு வழங்கப்படும் அந்தஸ்துக்குச் சமமான அந்தஸ்தை அனுபவித்தலும் வேண்டும்.

2. ச.செ.ச.வும் அதன் பேராளர் குழுவும் இந்த உடன்படிக்கை மூலம் அதற்கு அளிக்கப்பட்ட சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும்.

3. ச.செ.ச.வும் அதன் பேராளர் குழுவும் அதன் ஆதனமும், ஏதேனும் குறிப்பான விடயத்தில் ச.செ.ச. பேராளர் குழு இந்த விடுபாட்டுரிமையை விட்டுவிட்டுள்ள அளவுக்குத் தவிர, சட்ட அல்லது நிர்வாக நியாயாதிக்கத்திலிருந்து விடுபாட்டுரிமை கொண்டனவாதல் வேண்டும்.

4. ச.செ.ச. பேராளர் குழுவின் அலுவலர்கள், குதங்கள் மற்றும் வேறு வளவுகள் ச.செ.ச பேராளர் குழுவின் வாகனங்கள், அதன் பதிவேடுகள், ஆவணங்கள், கடிதப்போக்குவரத்து, ஆதனம், சொத்துக்கள் மற்றும் நிதிகள் முழுநிறைக் காப்புடையனவாக இருத்தல் வேண்டும். ச.செ.ச. வின் சம்மதத்துடன் தவிர, தேடுகையிடுதல், தேவைக்கெடுத்தல், பறிமுதல் செய்தல், பறித்தெடுத்தல் என்பவற்றுக்கெதிராகவும் நிறைவேற்று, நிருவாக, நீதிமுறை அல்லது, சட்டச் செயற்பாடு எதன்மூலமாயினும் வேறெந்த வகையிலானதுமான தலையீடு எதற்கெதிராகவும் இவை விடுபாட்டுரிமை கொண்டனவாதல் வேண்டும்.

*உறுப்புரை 2*

**ஆதனமும் நிதிகளும்**

1. ச.செ.ச. பேராளர் குழு சகல பிராந்திய, மாநகர, மாகாண அல்லது தேசிய வருமதிகளிலிருந்தும் வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ச.செ.ச. பேராளர் குழு, எவ்வாறாயினும், பகிரங்கப் பயன்பாட்டுச் சேவைகளுக்காக விதிக்கப்படும் கட்டணங்களிலிருந்து விலக்களிப்புக் கோர முடியாது.

2. ச.செ.ச. பேராளர் குழு வரிகள் சுங்கத் தீர்வைகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களாக இருப்பர். மேலும் பொருத்தமான சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைவாக, அதன் செயற்பாடுகளுக்கு அவசியமான சகல பொருட்களையும் இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் தொடர்பான சகல மட்டுப்பாடுகளிலிருந்தும் தடைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டவர்களாவர். எவ்வாறாயினும் அத்தகைய விலக்களிப்பின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள், இலங்கை அரசாங்கத்துடன் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளின் கீழ் தவிர, இலங்கைக்குள்ளாக விற்பனை செய்யப்படுதலாகாதென விளங்கிக் கொள்ளப்படுகின்றது.

3. ச.செ.ச. பேராளர் குழு, பொருத்தமான சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைவாக, சுதந்திரமாக நிதிகளையும் கணக்குகளையும் ஏதேனும் நாணயத்தில் வைத்திருக்கலாம். அத்துடன் இலங்கைக்குள்ளாக ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கும் இலங்கைக்கும் வேறு ஏதேனும் அரசுக்கும் இடையேயும் சுதந்திரமாக இடமாற்றலாம்.

4. ச.செ.ச. பேராளர் குழு, பொருத்தமான சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைவாக, வரையறை இல்லாமல் எந்த நாணயமாகவும் அதன் நிதிகளை மாற்றலாம்.

5. ச.செ.ச. பேராளர் குழு தமது அலுவலகப் பாவனைக்காக மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்தல் தொடர்பிலான சகல வரிகளிலிருந்தும் சுங்கத் தீர்வைகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டதாதல் வேண்டும். மேலதிக மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்தல் அரசாங்கத்துடனான முற்கலந்தாலோசனைக்கும் முன்னங்கீகாரத்துக்கும் அமைந்ததாக இருக்கும். பேராளர் குழுவின் மோட்டார் வாகனங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் முன்னங்கீகாரமில்லாது, மீள் விற்பனை செய்யப்படுதலாகாது. எவ்வாறாயினும், இலங்கையின் அப்போதுள்ள சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக, மோட்டார் வாகனங்கள் மீள் ஏற்றுமதி செய்யப்படலாம்.

*உறுப்புரை 3*

**நிவாரணப் பொருட்கள்**

1. ச.செ.ச. பேராளர் குழு ச.செ.ச. உதவி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அல்லது உள்ளூர் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பதற்காக அல்லது வேறு மனிதாபிமான உதவி நல்கும் நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட ஏற்றுமதி செய்யப்பட்ட மற்றும் கப்பல் மாற்றியேற்றப்பட்ட நிவாரணப் பொருள்கள் தொடர்பான வரிகள் மற்றும் சுங்கத் தீர்வைகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படுதல், வேண்டும் என்பதுடன் சகல மட்டுப்பாடுகளிலிருந்தும் அல்லது தடைகளிலிருந்தும் விலக்குப்பெறுதலும் வேண்டும்.

2. ச.செ.ச. பேராளர் குழு நிவாரணப் பொருள்களின் விடயத்தில் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் வர்த்தக நடைமுறை சம்பந்தமான தேசிய சட்ட ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

3. ச.செ.ச. பேராளர் குழு, அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் தவிரவும் அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ்த் தவிரவும், தீர்வையில்லாமல் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களை விற்றல் ஆகாது.

4. ச.செ.ச. பேராளர் குழு, அரசாங்கத்துடனான கலந்தாலோசனைக்கமைவாகவும் அரசாங்கத்தின் ஒருங்கிணைப்புடனும் நிவாரண நடவடிக்கையின்போது, விநியோகிக்கப்படுவதற்காகப் பண்டங்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு வெற்றுக் குதங்களைப் பயன்படுத்த முற்படலாம். எனினும் அத்தகைய பண்டங்கள் செஞ்சிலுவைச் சங்கத்துக்குச் சொந்தமானவை என இயைபான ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் கொண்டு அடையாளங்காட்டப்பட வேண்டும்.

*உறுப்புரை 4*

**செய்திப் போக்குவரத்து**

1. ச.செ.ச. பேராளர் குழு அதன் உத்தியோகபூர்வ கடிதப்போக்குவரத்துகள் தொடர்பாக, தேசிய தொலைச் செய்திப் போக்குவரத்துச் சட்டவாக்கத்துக்கு இணங்க தபால், கேபிள் செய்திகள், தந்திகள், வானொலித் தந்திகள், தொலைபேசி மற்றும் ஏனைய செய்தித் தொடர்புகள் என்பவற்றின்மீது அளிக்கப்படும், முன்னுரிமைகள், வீதவரிகள், மற்றும் வரிகள் தொடர்பிலும் செய்தித் தாள்களுக்கும் வானொலிக்கும் தகவல் செய்திகள் கொடுப்பதற்கான வீதங்கள் தொடர்பிலும் ஏதேனும் வெளிநாட்டுத் தூதுக்குழுவுக்கு வழங்கப்படுவதிலும் பார்க்க வாய்ப்புக் குறைவானவையாயிராத பரிகரிப்பை அனுபவித்தல் வேண்டும்.

2. ச.செ.ச. பேராளர் குழுவின் உத்தியோகபூர்வ கடிதப்போக்குவரத்துச் செய்திப் போக்குவரத்து என்பன மீது எவ்வித தணிக்கையும் பிரயோகிக்கப்படுதல் ஆகாது. இந்த விடுபாட்டுரிமையானது ச.செ.ச. வுக்கு அல்லது அதிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட உத்தியோகபூர்வ ச.செ.ச. வெளியீடுகள், புகைப்பட அல்லது சினிமாப்படச் சுருள், புகைப்படங்கள், கட்புல, செவிப்புல பதிவுகள் மற்றும் நாட்டின் தேசிய சட்டத்துக்கிணங்க அதனால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சிக்கான பொருள்கள் என்பவற்றுக்கும் ஏற்புடையதாகும்.

3. ச.செ.ச. அத்தகைய வழிவகைகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும் போதெல்லாம், ஜெனிவா தலைமை நிலையத்துக்கும் இலங்கையிலுள்ள பேராளர் குழுவுக்குமிடையே அல்லது வேறு நாடுகளிலுள்ள பேராளர் குழுக்களுக்குமிடையே அல்லது தேசிய ஆள்புலத்துக்குள்ளாகத் தொழிற்படும் பேராளர் குழுவுக்கும் அதன் களப்பிரிவுகளுக்குமிடையே குறியீடற்ற செய்திகளை வானொலி மூலம் அனுப்பலாம். ஆயின், இத்தகைய குறியீடற்ற செய்திகள் மூலம் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தடுத்துவைக்கப்பட்ட விடயம் எதுவும் அனுப்பப்படுதலாகாது.

4. அத்தகைய செய்தித் தொடர்புகள் எல்லாவற்றிற்கும் இந்நோக்கத்துக்கென ச.செ.ச. வுக்குக் குறித்தொதுக்கப்பட்ட அலைவரிசைகள் பயன் படுத்தப்பட வேண்டும். இந்நோக்கத்துக்காக ச.செ.ச. பேராளர் குழு அவசியமான உரிமமளிக்கும் ஆவணங்களைத் தேசிய தொலைத்தொடர்பு நிருவாகத்தினரிடமிருந்து பெற்றுக்கொண்டதன் பின்னர், அதன் வளவுகளுக்குள் தேவைப்படும் வானொலி உபகரணத்தை நிறுவமுடியும் என்பதுடன் தேசிய ஆள்புலத்துக்குள்ளாக அசைவுள்ள உபகரணத்தைப் பயன்படுத்தவும் முடியும்.

5. இந்த உறுப்புரையில் உள்ளது எதுவும், அரசாங்கத்துக்கும் ச.செ.ச. வுக்குமிடையே உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறாக செய்திப் போக்குவரத்து தொடர்பிலான தோதான பாதுகாப்பு முற்காப்புக்களை மேற்கொள்வதனை தடுப்பதாகப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

*உறுப்புரை 5*

**ச.செ.ச. பேராளர் குழுவும் பிறநாட்டு ஊழியர்களும்**

1. இலங்கை அரசாங்கமும் ச.செ.ச. வும், இலங்கையில் ச.செ.ச. பேராளர் குழுவினது செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, ஒன்றுடன் மற்றொன்று கலந்தாலோசித்து, இலங்கையில் இருக்கவேண்டிய ச.செ.ச. பேராளர்குழுவினரின் தொகையைக் காலத்துக்குக் காலம் தீர்மானிக்க வேண்டும்.

2. ச.செ.ச. பேராளர் குழு, சகல ச.செ.ச. பேராளர்களும் பிறநாட்டு ஊழியர்களும் பணியாற்றவரும் திகதிபற்றியும் பணி முடிவுறுத்தும் அல்லது வெளியேறும் திகதிபற்றியும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும்.

3. சுவிஸ் நாட்டினத்தவர்களாகவுள்ள ச.செ.ச. பேராளர்களும், வெளிநாட்டு ஊழியர்களும் அவர்களின் வாழ்க்கைத்துணைகளும் அவர்களது குடும்பங்களைச் சார்ந்த தங்கிவாழ் உறுப்பினர்களும் சர்வதேச மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலான நிறுவனங்களின் தூதுக்குழு உறுப்பினர்களுக்கும் ஊழியர்களுக்கும் அளிக்கப்படுவதற்குச்

சமமான அந்தஸ்தை வேண்டும் என்பதுடன் தற்போதைய உடன்படிக்கையில் ஏற்பாடுசெய்யப்பட்ட சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் அனுபவித்தலும் வேண்டும்.

4. ச.செ.ச. பேராளர்களும் பிறநாட்டு ஊழியர்களும் -

(அ) தமது அலுவலகப் பணிகளைப் பிரயோகிப்பதில் புரியப்பட்ட செயல்கள் தொடர்பாக இலங்கையின் நீதித்துறை அல்லது நிர்வாகத்துறை அதிகாரிகளின் நியாயாதிக்கத்திலிருந்து விடுபட்டவர்களாக இருப்பர் ;

(ஆ) தமது அலுவலகப் பணிகள் தொடர்பிலான கருமங்களில் சாட்சியொருவராகச் சாட்சியளிப்பதற்குக் கட்டுப்பாட்டுடையவராக மாட்டார் ;

(இ) ச.செ.ச. வினால் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் என்பன தொடர்பாக எவ்வித வரிவிதிப்பிலிருந்தும் விலக்களிக்கப்பட்டவர்களாக இருப்பர் ;

(ஈ) தமது வாழ்க்கைத்துணைகள் மற்றும் தமது குடும்பங்களில் தங்கிவாழ் உறுப்பினர்கள் ஆகியோருடன் சேர்ந்து, குடிவரவு மட்டுப்பாடுகள், வெளிநாட்டுப் பதிவுத் தேவைப்பாடுகள் மற்றும் தேசிய சேவைக் கடப்பாடுகள் என்பவற்றிலிருந்து விடுபட்டவர்களாக இருப்பர் ;

(உ) சர்வதேச மற்றும் அரசாங்கத்துக்கிடையிலான நிறுவகங்களின் தூதுக் குழுக்களில் ஒப்பீட்டளவில் ஒத்ததரத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நாணயமாற்று வசதிகள் தொடர்பிலான அதே சிறப்புரிமைகள் வழங்கப்பட வேண்டியவர்களாக இருப்பர் ;

(ஊ) தமது வாழ்க்கைத்துணைகள் மற்றும் தமது குடும்பங்களில் தங்கிவாழ் உறுப்பினர்கள் ஆகியோருடன் சேர்ந்து, சர்வதேச நெருக்கடி நிலைமைகளில் சர்வதேச மற்றும் அரசாங்கத்துக்கிடையிலான நிறுவகங்களின் தூதுக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவனபோன்ற அதே நாடுகடத்தல் வசதிகள், வழங்கப்படுபவர்களாக இருக்கவேண்டும் ;

(எ) தாம் இலங்கையில் முதலாவதாகத் தமது பதவியை வகிக்கத்தொடங்கும் நேரத்தில் தமது ஆதனம், தளபாடம், உடைமைப்பொருள்கள் மற்றும் தமது சொந்தப்பாவனைக்கான வீட்டுபயோகப் பொருள்கள் என்பவற்றை தீர்வையின்றி இறக்குமதி செய்வதற்கு உரிமை உடையோராவர் ;

(ஏ) தாம் நாட்டைவிட்டுப் போகும்போது தமது ஆதனம், தளபாடம், உடைமைப்பொருள்கள் மற்றும் வீட்டுபயோகப் பொருள்கள் என்பவற்றை தீர்வையின்றி ஏற்றுமதி செய்வதற்கு உரிமை உடையோராவார்.

5. இச்சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும் 4 (அ) முதல் 4 (இ) வரையிலான பந்திகள் தவிர, ச.செ.ச. வுக்காக வேலை செய்யும் இலங்கை நாட்டினத்தவரால் அனுபவிக்கப்டுதலாகாதென விளங்கிக்கொள்ளப்படுகின்றது.

6. ஓராம் உறுப்புரையின் 4 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ச.செ.ச. பேராளர்களினதும் வெளிநாட்டு ஊழியவர்களினதும் வதிவிடங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

7. (அ) இந்த உறுப்புரையில் நிரற்படுத்தப்பட்ட சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும் ச.செ.ச. அதன் மனிதாபிமானப் பணிகளைக் கொண்டு நடாத்த வசதியளிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளனவே அன்றித் தனிப்பட்ட ஆட்களுக்கல்ல. ஆகவே, ச.செ.ச. வில் பேராளர்களுக்கும் வெளிநாட்டு ஊழியர்களுக்கும் அவர்களின் வேலையிலும் பணியிலும் அக்கறைகொண்டு ச.செ.ச. வுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன ;

(ஆ) இலங்கை அரசாங்கமானது, அதன் அபிப்பிராயப்படி, விடுபாட்டுரிமையானது நீதி நெறிமுறையைத் தடைப்படுத்துமெனவும் ச.செ.ச. வின் நலன்களுக்குப் பங்கமில்லாமல் விட்டுவிடப்பட முடியும் எனவும் கருதுகின்றவிடத்து, இலங்கை அரசாங்கம் எவரேனும் பேராளரின் அல்லது பிறநாட்டு ஊழியரின் விடுபாட்டுரிமையினை விட்டுவிடுமாறு ச.செ.ச. வைக் கோரலாம். ச.செ.ச. அத்தகைய விட்டுவிடுகையானது, நல்ல காரணங்களுக்காக ச.செ.ச. வின் நலன்களைப் பாதித்தாலொழிய, அத்தகைய வேண்டுகோளுக்குச் சம்மதமளித்தல் வேண்டும்.

8. ச.செ.ச. இந்த உறுப்புரையில் நிரற்படுத்தப்பட்ட சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் எந்தவிதத்திலும் துஷ்பிரயோகஞ்செய்யப்படுவதனைத் தடுக்கும் கருத்துடன் எல்லா நேரங்களிலும் இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைக்கலாம்.

*உறுப்புரை 7*

1. ச.செ.ச. இல் நீதியை முறையாக நிருவகிப்பதனையும், பொலிசு ஒழுங்குவிதிகள் கடைப்பிடிக்கப்படுவதனையும் ச.செ.ச. வுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள் மற்றும் வசதிகள் தொடர்பான எவையேனும் துஷ்பிரயோகங்கள் சம்பவிப்பதனைத் தடுப்பதனையும் இயலச் செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தின் தோதான அதிகாரிகளுடன் எல்லா நேரங்களிலும் ஒத்துழைத்தல் வேண்டும்.

2. ச.செ.ச. அலுவலகங்கள் அவற்றின் அலுவலகப் பணிகள் பிரயோகிக்கப்படுவதற்கு இசைவாயில்லாத எவ்விதத்திலும் பயன்படுத்தலாகாது.

**1990 ஆம் ஆண்டின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் (ICRC ) இடையிலான உடன்படிக்கைக்கான பிற்சேர்க்கை**

1. ICRC யும் அதேபோல அதனுடைய தற்போதய மற்றும் முன்னாள் ஊழியர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர், தாம் எவ்விடத்தில் அமையப் பெற்றுள்ளார்கள் என்பதை கருத்திற்கொள்ளாது, பேசப்படும் அல்லது எழுதப்படும் பதங்கள் உள்ளடங்கலாக தமது உத்தியோகபூர்வ பதவியில் தம்மால் ஆற்றப்படும் சகல செயல்கள் தொடர்பிலும், தூதுக்குழுச் சேவையிலிருந்து தாம் விலகிக் கொண்டுள்ள பின்னருங்கூட, ஒரு சாட்சியாக அழைக்கப்படுவதிலிருந்து அல்லது இன்னொரு வகையில் சான்றினை அளிக்கும்படி கோரப்படுவதிலிருந்து விலகியிருக்க வேண்டும். கூறப்பட்ட விலக்களிப்பானது சகல வகையான சட்ட நடைமுறைகளுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

2. தூதுக் குழுவின் தலைவர் மற்றும் தூதுவர்கள் ஆகியோர், பேசப்படும் அல்லது எழுதப்படும் பதங்கள் உள்ளடங்கலாக தமது உத்தியோகபூர்வ பதவியில் தம்மால் ஆற்றப்படும் சகல செயல்கள் தொடர்பிலும், தமது பணி முடிவுற்ற பின்னருங்கூட, தமது இனத்துவத்தினைக் கருத்திற்கொள்ளாது, சட்டச் செய்முறையிலிருந்தான விலக்களிப்பினை அனுபவிக்கலாம். நியாயாதிக்கத்திலிருந்தான இவ் விலக்களிப்பானது தமது தொழிற்பாட்டுப் பிரயோகம் காரணமாக தாம் கற்றறிருந்திருக்கக்கூடிய விடயங்கள் தொடர்பில் சான்றளிப்பதற்கான விலக்களிப்பினையும் உள்ளடக்கும்.

3. ICRC யானது தூதரக விரைவுத் தபால் (கூரியர்) மற்றும் பைகள் போன்ற ஒரே விலக்களிப்பு மற்றும் சிறப்புரிமைகளைக் கொண்டிருக்கும் அதன் கடிதத் தொடர்புகளை விரைவுத் தபாலில் (கூரியர்) அல்லது பொறியிடப்பட்ட பைகளில் அனுப்பி வைப்பதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான உரிமையினைக் கொண்டிருக்க வேண்டும்.

4. இலங்கை அரசாங்கமானது ICRC யினுடைய அறிக்கைகள், கடிதங்கள் மற்றும் ஏனைய தொடர்பாடல்களினதும் அதேபோன்று ICRC யுடனான அதன் தொடர்பாடல்களின் உள்ளடக்கங்கள் மற்றும் பதிவுகளினதும் அந்தரங்கத்தன்மை குறித்துக் கரிசனை கொள்வதற்கு அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும். அத்தகைய கரிசனையானது ICRC யினுடைய முன் இணக்கமின்றி, உத்தேச பெறுநரை விட வேறு ஒருவருக்கு அவற்றின் உள்ளடக்கத்தினை வெளிப்படுத்துவதையோ அல்லது சட்ட நடைமுறைகளில் அவற்றின் வெளிப்படுத்தலை அல்லது பாவனையினை அனுமதித்தலையோ உள்ளடக்காது, அத்துடன் ;

5. விலக்களிப்பானது நீதி முறையினை பாதிக்கும் எனவும் ICRC யினுடைய கரிசனைகளுக்கு குந்தகமின்றி கைவிடப்பட முடியும் எனவும் அதன் தனித்த அபிப்பிராயம் காணப்படும் எந்தவொரு பட்சத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு சிறப்புரிமையினையும் விலக்களிப்பினையும் ICRC கையுதிர்க்கலாம். அத்தகைய கையுதிர்ப்பானது ICRC யினுடைய தலைவரினால் அல்லது ஏதேனும் தரப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ்வாறு செய்யுமாறு தத்துவத்தினை அவர் கையளித்துள்ள ஆள் ஒருவரினால் எழுத்தில் தரப்படும் போது மாத்திரமே வலுவுள்ளதாக இருக்கும்.

*10- 712/6*

---

**1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்**

*4ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1996 ஆம் ஆண்டின் 9 ஆம் ,லக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 1993 சனவரி 18ஆம் திகதியன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை நியதிகளுக்கு அவசியமான அளவுக்கு, (அந்த உடன்படிக்கையின் இயைபான உறுப்புரைகள் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளன), உலக பேணிக்காப்பு ஒன்றியம் (இ.பே.ச.ஒ) இயற்கையும், இயற்கை மூலவளங்களையும் பேணிக்காப்பதற்கான சர்வதேச ஒன்றியம்) தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

மங்கள சமரவீர, பா.உ.,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016 செத்தெம்பர் 30.

**அட்டவணை**

சூழலைப் பேணிக்காக்கும் நடவடிக்கைகளைத் தொடருவதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் அத்துடன்

உலகப் பேணிக்காப்பு ஒன்றியத்திற்கும் -. இ. பே.ச.ஒ (இயற்கையையும், இயற்கை மூலவளங்களையும் பேணிக்காப்பதற்கான சர்வதேச ஒன்றியத்திற்கும் )இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை விவரக்குறிப்பு

**7. உடன்படிக்கை**

1. இலங்கை அரசாங்கமானது, இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திற்கு (ஐ.நா.அதி.) வழங்கப்பட்டுள்ளனவற்றிலும் பார்க்க வாய்ப்புக் குறைவானவையாகவிராத குறித்த சில வசதிகளையும், குறித்த சில சிறப்புரிமைகளையும் உலகப் பேணிக்காப்பு ஒன்றியத்திற்கு - இ.பே.ச.ஒ- வழங்க உடன்பட்டுக்கொள்கிறது. இதில் பின்வருவனவும் உள்ளடங்கும் :-

   (அ) உலகப் பேணிக்காப்பு ஒன்றியமும் -. இ. பே.ச.ஒ- அதன் ஆதனங்கள், நிதிகள், சொத்துக்கள் என்பனவும் இவ்விவரக் குறிப்புக்கான பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

பின்னிணைப்பு.

விடுபாட்டுரிமைகளும் சிறப்புரிமைகளும்

**உலகப் பேணிக்காப்பு ஒன்றியத்தின் இ.பே.ச.ஒ- விடுபாட்டுரிமைகளும் சிறப்புரிமைகளும்**

1. உலகப் பேணிக்காப்பு ஒன்றியமானது, இ.பே.ச.ஒ. அதன் ஆதனமும் சொத்துக்களும் எங்காயினும் அமைந்திருப்பினும், அத்துடன் எவரினால் சொந்தமாக வைத்திருக்கப்படினும், ஏதேனும் குறிப்பிட்ட விடயத்தில் பணிப்பாளர் அதன் விடுபாட்டுரிமையை வெளிப்படையாகக் கைதுறந்திருக்கும் அளவுக்குத் தவிர, ஒவ்வொரு வகையான சட்ட மன்றாணையிலிருந்தும் விடுபாட்டுரிமையை அனுபவித்தல் வேண்டும். எவ்வாறாயினும் விடுபாட்டுரிமையின் கைதுறத்தல் எதுவும் எந்த வகையான நிறைவேற்றுகை நடவடிக்கைக்கும் விசாலித்தல் ஆகாது.

2. உலகப் பேணிக்காப்பு ஒன்றியத்தின் -. இ.பே.ச.ஒ வளவுகள் முழுநிறைக் காப்புடையனவாக இருக்கும். உலகப் பேணிக்காப்பு ஒன்றியத்தின் - இ.பே.ச.ஒ ஆதனமும், சொத்துக்களும் அவை எங்கு அமைந்திருப்பினுஞ்சரி, எத்தகையவரால் வைத்திருக்கப்படினுஞ்சரி, தேடுகையிடுதல், தேவைக் கெடுத்தல், பறிமுதல் செய்தல், பறித்தெடுத்தல் என்பவற்றுக்கெதிராகவும், நிறைவேற்று, நிர்வாக நீதிமுறை அல்லது சட்டநடவடிக்கை மூலமான வேறு ஏதேனும் வகையான தலையீட்டிற்கு எதிராகவும் விடுபாட்டுரிமை கொண்டனவாக இருத்தல் வேண்டும்.

3. உலகப் பேணிக்காப்பு ஒன்றியத்தின் -. இ.பே.ச.ஒ தொல்பொருட்களும், பொதுவில் அதற்குச் சொந்தமான அல்லது அதனால் வைத்திருக்கப்படும் அனைத்து ஆவணங்களும், அவை எங்கு அமைந்திருப்பினுஞ்சரி, முழு நிறைக் காப்புடையனவாக இருத்தல் வேண்டும்.

4. நிதிக் கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகள் அல்லது ஏதேனும் வகையான கடன் தவணை உரிமைகள் மூலம் மட்டுப்படுத்தப்படாது.-

   (அ) உலகப் பேணிக்காப்பு ஒன்றியமானது-. இ.பே.ச.ஒ நிதிகளை அல்லது ஏதேனும் வகையான நாணயத்தை வைத்திருக்கலாம் அத்துடன் ஏதேனும் நாணயத்திலான கணக்குகளைத் தொழிற்படுத்தலாம் ;

   (ஆ) உலகப் பேணிக்காப்பு ஒன்றியமானது-. இ.பே.ச.ஒ ,லங்கையிலிருந்து வேறு ஏதேனும் நாட்டிற்கும் அத்துடன் வேறு ஏதேனும் நாட்டிலிருந்து இலங்கைக்கும், அல்லது இலங்கைக்குள்ளும் அதன் நிதிகளை அல்லது நாணயத்தை இடமாற்றுவதற்கும், அதனால் வைத்திருக்கப்படும் ஏதேனும் நாணயத்தை வேறு ஏதேனும் நாணயமாக மாற்றுவதற்கும் சுதந்திரமுடையதாதல் வேண்டும். ஆயின், இலங்கையில் கொள்ளப்பட்ட நிதிகளை அல்லது நாணயத்தை அல்லது இலங்கை ரூபா நிதிகளை அல்லது நாணயத்தை இடமாற்றுதலும், மாற்றுதலும் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்ததாகவிருக்கும்.

5. உலகப் பேணிக்காப்பு ஒன்றியமும் - இ.பே.ச.ஒ அதன் சொத்துக்கள், வருமானம் மற்றும் ஏனைய ஆதனங்களும் பின்வருவனவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும்.

(அ) அனைத்து நேரடி வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், பகிரங்க பயன்பாட்டுச் சேவைகளுக்காக விதிப்பனவுகளாகவுள்ள வீத வரிகள் மற்றும் வரிகளிலிருந்துஉலகப் பேணிக்காப்பு ஒன்றியம்-இ.பே.ச.ஒ விலக்களிப்பு கோரமுடியாது ;

(ஆ) அலுவலகப் பயன்பாட்டுக்காக உலகப் பேணிக்காப்பு ஒன்றியத்தினால் -இ.பே.ச.ஒ இறக்குமதி செய்யப்படும் அல்லது ஏற்றுமதிசெய்யப்படும் பொருட்கள் தொடர்பில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான சுங்கத்தீர்வைகள் வரிகள் மற்றும் தடைவிதிப்புகள், மட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய விலக்களிப்புக்களின்கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், மீள ஏற்றுமதி செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், இலங்கை அரசாங்கத்தின் முன் அனுமதியுடன் தவிர, இலங்கைக்குள் விற்பனை செய்யப்படுதலும் ஆகாது. இலங்கைக்குள் விற்பனை செய்யப்பட்டால், அத்தகைய பொருட்கள் வழமையான தீர்வைகளுக்கும், வரிகளுக்கும் அமைந்தனவாக இருக்கும் ;

(இ) அதன் வெளியீடுகள் தொடர்பில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள்மீதான சுங்கத்தீர்வைகள், வரிகள் மற்றும் தடைவிதிப்புக்கள், மட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

6. உலகப் பேணிக்காப்பு ஒன்றியமானது- இ. பே.ச.ஒ அதன் உத்தியோகபூர்வ கடிதப் போக்குவரத்துக்கள் தொடர்பாக தபால், கேபிள் செய்திகள், தந்திகள், வானொலித் தந்திகள், தொலைபேசி மற்றும் ஏனைய செய்தித் தொடர்புகள் என்பவற்றிற்கு அளிக்கப்படும் முன்னுரிமைகள் வீதவரிகள் மற்றும் வரிகள் தொடர்பிலும், செய்தித்தாள்களுக்கும், வானொலிகளுக்கும், தொலைக்காட்சிக்கும், தகவல்செய்திகள் கொடுப்பதற்காகச் செய்தி அறிக்கை வீதங்கள் தொடர்பிலும் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுவதிலும் பார்க்க வாய்ப்புக் குறைவானவையாயிராத நடாத்து முறையை அனுபவித்தல் வேண்டும். உலகப் பேணிக்காப்பு ஒன்றியத்தின் - இ.பே.ச.ஒ உத்தியோகபூர்வ கடிதப் போக்குவரத்து, மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ செய்திப் போக்குவரத்துமீது எவ்வித தணிக்கையும் பிரயோகிக்கப்படுதல் ஆகாது.

7. உலகப் பேணிக்காப்பு ஒன்றியமானது -. இ.பே.ச.ஒ குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கும், அதன் கடிதத் தொடர்புகளை கூரியர் சேவைமூலம் அல்லது பைகள் மூலம் அனுப்புவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் உரிமையுடையதாதல் வேண்டும். இது, இலங்கையிலுள்ள ஐ.நா.அதி. அலுவலகத்திற்கு வழங்கப்படும் அதே விடுபாட்டுரிமைகளையும், சிறப்புரிமைகளையும் கொண்டதாகவிருக்கும்.

8. உலகப் பேணிக்காப்பு ஒன்றியமானது -. இ.பே.ச.ஒ இலங்கையில் ஐ.நா.அதி. அலுவலகத்திற்கும், அதன் ஆதனங்கள், நிதிகள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றுக்கும் அளிக்கப்பட்ட அத்தகைய வேறு சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும் துய்த்தல் வேண்டும்.

10- 712/7

---

**1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்**

4ஆம் பிரிவின் கீழான கட்டளை

1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 1995 செப்தெம்பர் 19ஆம் திகதியன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட இலங்கையில் ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழுவின் பேராளக் குழுவைத் தாபித்தலும் அக்குழுவினரின் சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும் மீதான உடன்படிக்கையின் நியதிகளுக்குப் பயன் கொடுப்பதற்கு அவசியமான அளவுக்கு, (அந்த உடன்படிக்கையின் இயைபான உறுப்புரைகள் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளன) ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

மங்கள சமரவீர பா.உ.,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016 , செத்தெம்பர் 30.

## அட்டவணை

## இலங்கையில் ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழுவின் பேராளக் குழுவைத் தாபிப்பதன் மீதும் அக்குழுவினரின் சிறப்புரிமைகள் , விடுபாட்டுரிமைகள் மீதுமான ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழுவுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்குமிடையேயான உடன்படிக்கை

*உறுப்புரை 3*

1. ஆணைக்குழுவின் பேராளர் குழுவும், அதன் தலைவரும், அதன் உறுப்பினர்களும் அவரவரது குடும்பவுறுப்பினர்களாகவமையும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட இராஜதந்திர தூதுக் குழுவுக்கும் அத்தூதுக்குழுக்களின் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் அவரவரது குடும்ப உறுப்பினர்களாக அமையும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் முறையே வழங்கப்பட்டு அவர்களினால் அனுபவிக்கப்படும் இராஜதந்திர உறவுகள் மீதான 1961 ஏப்பிறல் 18 ஆந் தேதிய வியன்னா சமவாயத்தில் விதிக்கப்பட்டவற்றை நேரொத்தனவாகவுள்ள அத்தகைய உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கடப்பாடுகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

2. இராஜதந்திர உறவுகள்மீதான 1961 ஏப்பிறல் 18 ஆந் தேதிய வியன்னா சமவாயத்தின் ஏனைய ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. 1965 ஏப்பிறல் 8 ஆந் திகதியன்று பிறஸ்ஸல்சில் செய்யப்பட்ட ஐரோப்பிய சமூகங்களின் தனியொரு பேரவையையும் தனியொரு ஆணைக்குழுவையும் தாபிக்கின்ற பொருத்தனையுடன் இணைக்கப்பட்டுள்ள ஐரோப்பிய சமூகங்களின் சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும் மீதான தாயேட்டின் 17 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விதமாக, ஐரோப்பிய சமூகங்களின் உறுப்பு நாடுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தூதுக்குழுவுக்கும் அதன் தலைவருக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் அவரவரது குடும்ப உறுப்பினர்களாகவுள்ள அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் அதே உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் வழங்கும் என்ற நிபந்தனையின்மீது அந்த உரிமைகளும் சிறப்புரிமைகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

10- 712/8

---

## 1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்

4ஆம் பிரிவின் கீழான கட்டளை

1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர உரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் 2016 இலிருந்து 2018 வரையுள்ள ஆண்டுகளுக்காகப் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து பெறப்படவுள்ள கடன்கள் தொடர்பில் கொரியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்குமிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் நியதிகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமான அளவிற்கு 2016 யூன் 16 ஆந் திகதியன்று செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் இயைபுள்ள உறுப்புரைகள் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் பிரதிநிதிகள், பதவியினர்கள், குடும்பங்கள் மற்றும் அலுவலகம் ஆகியவற்றுக்குச் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

மங்கள சமரவீர, பா.உ.,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, செத்தெம்பர் 30.

**அட்டவணை**

**2016 இலிருந்து 2018 வரையுள்ள ஆண்டுகளுக்காகப் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து பெறவுள்ள கடன்கள் தொடர்பில் கொரியக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்குமிடையிலான கட்டமைப்பு உடன்படிக்கை**

2. இலங்கை அரசாங்கமானது பிரதிநிதிகள், பணியாட்டொகுதியினர் மற்றும் அவர்களின் குடும்பங்களை பின்வரும் சிறப்புரிமைகள், விலக்களிப்புக்கள் மற்றும் நன்மைகளுக்கு ஏற்புடையதாகச் செய்தல் வேண்டும்:

(அ) பிரதிநிதிகள், பணியாட்டொகுதியினர் மற்றும் அவர்களின் குடும்பங்கள் சார்பில்:

(i) வெளிநாடுகளிலிருந்து அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் ஏதேனும் ஊதியங்கள் அல்லது படிகளின் மீது அல்லது அவற்றுடன் தொடர்புபட்டு விதிக்கப்படும் வருமான வரி மற்றும் ஏனைய இறைவரிக் கட்டணங்களிலிருந்து விலக்களித்தல் ;

(ii) பிரதிநிதிகள் மற்றும் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் வருகைதந்து ஆறு (06) மாதங்களுக்குள் இறக்குமதிகள் செய்யப்பட்டால், பதிவுக் கட்டணங்கள், வருடாந்த வருமான உரிமப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வாகனம் செலுத்தல் உரிமப்பத்திரக் கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்களித்து, ஒவ்வொரு பிரதிநிதிக்கும் மற்றும் பணியாட்டொகுதி உறுப்பினருக்கும் ஒரு மோட்டார் வாகனம் உள்ளடங்கலாக, தனிப்பட்ட மற்றும் வீட்டு உடமைகளை இறக்குமதி செய்வது தொடர்பில், களஞ்சியப்படுத்தல், வண்டியில் ஏற்றிச் செல்லல் மற்றும் அதையொத்த சேவைகள் ஆகியவற்றுக்கானவற்றை விட, கொன்சுலர் கட்டணங்கள், சுங்கத் தீர்வைகள், வரிகள் மற்றும் ஒத்த தன்மை கொண்ட ஏனைய கட்டணங்களிலிருந்து விலக்களித்தல் ;

(iii) உள்நாட்டுக் கொள்வனவு ஒன்றினைச் செய்யும் பட்சத்தில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் ஏதேனும் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்யாத ஒவ்வொரு பிரதிநிதிக்கும் மற்றும் பணியாட்டொகுதி உறுப்பினருக்கும், ஒரு மோட்டார் வாகனத்தின் மீது விசேட நுகர்வு வரி மற்றும் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களித்தல்

(iv) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் அவர்களின் ஒப்படைப் பணிக் காலப்பகுதி சார்பில் அங்கு உள் நுழைவதற்கும், புறப்பட்டுச் செல்வதற்கும் அத்துடன் தற்காலிகமாக தங்கியிருப்பதற்கும் அனுமதித்தல், மற்றும் பதிவினை உரிமை மாற்றுவதற்கான நடைமுறைகளைத் துரிதப்படுத்தலும் அதற்கு உதவி செய்தலும், மற்றும் கொன்சுலர் கட்டணங்களிலிருந்து விலக்களித்தலும்

(v) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உரிய அதிகாரிகளினால், இந் நாட்டிற்குள் பிரதிநிதிகள், பணியாட்டொகுதியினர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் உள் நுழைவிற்காக அவர்களுக்கு ஒரு மாத உள் நுழைவு வீசாவினை (உள்நுழைவு அனுமதி) வழங்குதல், மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு அவர்கள் வருகை தந்ததன் பேரில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஏற்கனவேயுள்ள குடிவரவுச் சட்டங்களுக்கிணங்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பரிந்துரையின் பேரில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் அதிபதியினால், அவர்களின் ஒப்படைப்பணிக் காலப்பகுதிக்கு வலுப்பெறும் வண்ணம் பன்முக நுழைவு வதிவிட வீசாவினை வழங்குதல் அத்துடன்

(vi) பிரதிநிதிகள் மற்றும் பணியாட்டொகுதியினரின் வருகை பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிற்கு அறியத்தரல், மற்றும் பிரதிநிதிகள் மற்றும் பணியாட்டொகுதியினரின் கடமைகளின் செயற்றிறனிற்கு அவசியமான சகல அரசாங்க முகவராண்மைகளினதும் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆளடையாள அட்டைகளை வழங்குதல்.

(ஆ) அலுவலகம் சார்பில்:

(i) அலுவலக உபகரணத்தினை இறக்குமதி செய்வது தொடர்பில், களஞ்சியப்படுத்தல், வண்டியில் ஏற்றிச் செல்லல் மற்றும் அதையொத்த சேவைகள் ஆகியவற்றுக்கானவற்றை விட, சுங்கத் தீர்வைகள், வரிகள் மற்றும் ஒத்த தன்மை கொண்ட ஏனைய கட்டணங்களிலிருந்தும், அதேபோன்று இறக்குமதி உரிமைப் பத்திரங்கள் மற்றும் அந்நியச் செலாவணிக் காப்பீட்டுச் சான்றிதழ்களினைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடுகளிலிருந்தும் விலக்களித்தல் ;

(ii) இரு அரசாங்கங்களின் உரிய அதிகாரபீடங்களிற்கு இடையில் கார்களின் எண்ணிக்கையில் உடன்பாடு காணப்படின் அலுவலகச் செயற்பாடுகளுக்கு அவசியமான மோட்டார் வாகனங்களின் சுங்கத் தீர்வையின்றி இறக்குமதி செய்தல் அல்லது விசேட நுகர்வு வரி மற்றும் பெறுமதி சேர் வரி ஆகியன இன்றி உள்நாட்டில் கொள்வனவு செய்தல் ;

(iii) வெளிநாடுகளிலிருந்து அனுப்பி வைக்கப்படும் அலுவலக செலவினங்களுக்கான நிதியங்கள் மீது அல்லது அவற்றுடன் தொடர்புபட்டு விதிக்கப்படும் வருமான வரி மற்றும் ஏனைய இறைவரிக் கட்டணங்களிலிருந்து விலக்களித்தல் ;

(iv) அலுவலக வாடகை மீது விதிக்கப்படும் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களித்தல் ;

(v) பிரதிநிதிகள், பணியாட்டொகுதியினர் மற்றும் அலுவலகத்தினது கடமைச் செயற்றிறனிற்கு அவசியமான ஏனைய நடவடிக்கைகள்.

3. மேல் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மோட்டார் வாகனங்களானவை சுங்கத் தீர்வைகள் மற்றும் வரிகள் அல்லது அதையொத்த சிறப்புரிமைகளிலிருந்து விலக்களிப்புப் பெற உரித்தில்லாத தனியாட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் அதன் பின்னர் விற்கப்படின் அல்லது உரிமை மாற்றப்படின் அத்தகைய தீர்வைகள் மற்றும் வரிகளின் கொடுப்பனவுக்கு உட்படல் வேண்டும்.

4. மேல் 2 ஆம் பந்தியின் (அ) (ii) மற்றும் (ஆ) (i) மற்றும் (ii) ஆம் உப பந்திகளுக்கிணங்க, சுங்கத் தீர்வைகள், வரிகள் மற்றும் ஒத்த தன்மை கொண்ட ஏனைய கட்டணங்கள் இன்றி பொருட்களை இறக்குமதி செய்யும் பிரதிநிதிகள், பணியாட்டொகுதியினர் மற்றும் அவர்களின் குடும்பங்கள் அதேபோன்று அலுவலகம் ஆனவை, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி ஒழுங்குமுறைகளின் மூலம் உதவும் பொருட்டு இலங்கை அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய பொருட்கள் பற்றிய விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. பிரதிநிதிகள், பணியாட்டொகுதியினர் மற்றும் அவர்களின் குடும்பங்கள் அதேபோன்று அலுவலகம் ஆனவை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க சுங்கத் தீர்வைகள், வரிகள் மற்றும் ஒத்த தன்மை கொண்ட ஏனைய கட்டணங்கள் இன்றி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அனுமதியின் பேரில் மீள் ஏற்றுமதி செய்யலாம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் விற்கலாம் அல்லது இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கலாம்.

6. இலங்கை அரசாங்கமானது ஏதேனும் மூன்றாவது நாட்டின் நிறைவேற்று முகவராண்மைகளின் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் ஒத்த பணி ஒன்றினை ஆற்றும் சர்வதேச அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகள், பணியாட்டொகுதியினர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு அதேபோன்று அலுவலகங்களுக்கு ஏற்புடையதாகச் செய்யப்பட்டவற்றை விட குறைவான நலனைக் கொண்டிருக்கா வண்ணம் பிரதிநிதிகள், பணியாட்டொகுதியினர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு அதேபோன்று அலுவலகங்களுக்கு சிறப்புரிமைகள், விலக்களிப்புக்கள் மற்றும் நன்மைகளுக்கு ஏற்புடையதாகச் செய்தல் வேண்டும். இச் சிறப்புரிமைகளானவை இலங்கையர்களுக்கு ஏற்புடையதாதலாகாது.

10-712/9

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.